

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் (6.3.2025) அன்று திருவாரூர் மாவட்டம், மருதவஞ்சேரியில் உள்ள மொழிப் போர் தியாகி சாரங்கபாணியின் வீட்டிற்கு நேரில் சென்று அவரது திருவுருவப்படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வில் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா. தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன், சட்டமன்ற உறுப்பினர் பூண்டி.கே.கலைவாணன், மாவட்ட ஆட்சித்தலைவர் வ.மோகனசந்திரன், ஆகியோர் உடனிருந்தனர்.



திருப்பத்தூர் நகர தி.மு.க. செயலாளர் எஸ்.ராஜேந்திரன் தலைமையில் பஸ்நிலையம் எதிரே பொதுமக்களுக்கு குடிநீர் பந்தலை நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் எ.வ.வேலு திறந்து வைத்தார். அருகில் திருவண்ணாமலை நாடாளுமன்ற உறுப்பினர் சி.என். அண்ணாதுரை, மாவட்ட கழக செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ, திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அ.நல்லதம்பி, மாவட்டக் கழக துணை செயலாளர் டி.கே.மோகன், கே.பி.ஆர்.ஜோதிராஜன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### நெம்மேலியில் நாளை (10–ஆம் தேதி) காலை – காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள் சந்திப்பில்

# கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் கலந்துரையாடல்!

## தேர்தல் பணிகள் குறித்து ஆலோசனைகள் வழங்குகிறார்!

**சென்னை, மார்ச் 9–**

**மாமல்லபுரம் அருகே நெம்மேலியில் நாளை 10–ஆம் தேதி காலை நடைபெறும் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக நிர்வாகிகள் சந்திப்பு கூட்டத்தில் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று நிர்வாகிகளுடன் கலந்துரையாடுகிறார். சட்டமன்றத் தேர்தலில் கழகத்தினர் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து ஆலோசனை வழங்குகிறார்.**

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் கழகத் தலைவர் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேரில் சென்று ஆய்வுப் பணிகளை மேற்கொள்கிறார்.

அந்த வகையில் நாளை 10-ஆம் தேதி, நாளை மறுநாள் 11-ஆம் தேதி ஆகிய 2 நாட்கள் செங்கல்பட்டு மாவட்டத்தில் சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார்.

நாளை 10–ஆம் தேதி காலை 10 மணியளவில் சென்னையில் இருந்து கிழக்கு கடற்கரை இ.சி.ஆர். சாலை பூஞ்சேரி வழியாக பையனூர் சிப்காட்டில் அமைக்கப்பட்டுள்ள கோத்ரேஜ் தொழிற்சாலையை திறந்து வைக்கிறார்.

அதன் பின்பு மீண்டும் பூஞ்சேரி இ.சி.ஆர். சாலை வழியாக மாமல்லபுரம் அருகே உள்ள நெம்மேலியை வந்தடைகிறார். நெம்மேலியில் உள்ள லலிதா திருமண மண்டபத்தில் நாளை காலை 10.30 மணியளவில் நடைபெறும் “காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக நிர்வாகிகள் சந்திப்பு” மாபெரும் நிகழ்ச்சியில் பங்கேற்று கழக நிர்வாகிகளுடன் கலந்துரையாடுகிறார்.

மாவட்ட - மாநகர கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு - பொதுக்குழு உறுப்பினர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் கழகச் செயலாளர்கள், மாநகர வட்டச் செயலாளர்கள் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் இக்கூட்டத்தில் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் பங்கேற்கும் கழக நிர்வாகிகளின் கருத்துக்களை கேட்டறிந்த பின்பு கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வருகிற 2026-ஆம் ஆண்டு நடைபெறும் சட்டமன்றத் தேர்தலில் 200 தொகுதிகளில் வெற்றி என்ற இலக்கை அடைவதற்கான ஆலோசனைகளை கழக நிர்வாகிகளுக்கு வழங்குகிறார்.

இக்கூட்டத்திற்கான ஏற்பாடுகளை மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னின்று செய்து வருகின்றனர்.

### கழக இளைஞர் அணிச் செயலாளர் – துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பின்படி

# தூத்துக்குடி வடக்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் பொதுக்கூட்டங்கள்!

## தூத்துக்குடி – விளாத்திகுளம் – கோவில்பட்டியில் நடைபெறுகின்றன!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கீதாஜீவன் அறிவிப்பு!

*சென்னை, மார்ச் 9-*

*தி.மு.க. இளைஞரணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இந்தித் திணிப்பு - நிதிப்பகிர்வில் பாரபட்சம் - தொகுதி மறுசீரமைப்பில் அநீதி இழைக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து தமிழ்நாடு முழுவதும் சட்டமன்றத் தொகுதி வாரியாக தி.மு.க. இளைஞரணி சார்பில் கண்டனப் பொதுக்கூட்டங்கள் நடத்தப்பட வேண்டும் என்று அறிவித்திருந்தார்.*

*அவரது அறிவிப்பின்படி தூத்துக்குடி வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட மூன்று சட்டமன்றத் தொகுதிகளிலும் கண்டனப் பொதுக்கூட்டங்கள் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் மதியழகன் தலைமையில் நடைபெற உள்ளதாக தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் பி.கீதாஜீவன் அறிக்கை வெளியிட்டுள்ளார்.*

*இது குறித்து அவர் தெரிவித்திருப்பதாவது:-*



*தி.மு.க. இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பின்படி, இந்தித் திணிப்பு - நிதிப்பகிர்வில் பாரபட்சம் - தொகுதி மறுசீரமைப்பு என அனைத்து விதங்களிலும் தமிழ்நாட்டிற்கு அநீதி இழைத்திடும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து தூத்துக்குடி வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட தூத்துக்குடி சட்டமன்ற தொகுதியில் வருகின்ற மார்ச் 9-ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு சிதம்பர நகர் பேருந்து நிறுத்தம் அருகே இளைஞரணி சார்பில் கண்டனப் பொதுக்கூட்டம் நடைபெறும்.*

*கூட்டத்தில் சிறப்புப் பேச்சாளராக தி.மு.க. உயர்மட்ட செயல்திட்டக் குழு உறுப்பினரும், முன்னாள் அமைச்சருமான பொன்.முத்துராமலிங்கம், இளம் பேச்சாளர் சஞ்சய், தலைமை செயற்குழு உறுப்பினர் - மாநகர மேயர் ஜெகன் பெரியசாமி, மாநகர தி.மு.க. செயலாளர் எஸ்.ஆர். ஆனந்த சேகரன் உரையாற்ற உள்ளனர்.*

*மேலும் மார்ச் 10-ஆம் தேதி திங்கட்கிழமை மாலை 6 மணிக்கு விளாத்திகுளம் சட்டமன்றத் தொகுதியில் எட்டையாபுரம் - நடுவிற்பட்டி பகுதியில் இளைஞரணி சார்பில் நடைபெறும் கண்டனப் பொதுக்கூட்டத்தில் சிறப்புப் பேச்சாளராக ஊடகவியலாளர் மில்டன், இளம் பேச்சாளர் சக்திவேல் முருகன் மற்றும் விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜி.வி. மார்க்கண்டேயன் உரையாற்றுகிறார்கள்.*

*அதற்கு மறுநாள் மார்ச் 11-ஆம் தேதி செவ்வாய்க்கிழமை மாலை 6 மணிக்கு கோவில்பட்டி சட்டமன்றத் தொகுதியில் இலுப்பையூரணி ஊராட்சியில் உள்ள லாயல் மில் காலனி பகுதியில் நடைபெறும் கண்டனப் பொதுக்கூட்டத்தில் சிறப்புச் பேச்சாளராக தி.மு.க. மாநில மாணவரணித் தலைவர் இரா. ராஜீவ் காந்தி, இளம்பேச்சாளர் செல்வி.உமாராணி மற்றும் கோவில்பட்டி நகர்மன்ற தலைவர் கா. கருணாநிதி உரையாற்ற உள்ளார்கள்.*

*தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க. இளைஞரணி சார்பில் நடைபெற உள்ள இந்த மூன்று கண்டனப் பொதுக்கூட்டங்களிலும் நான் கலந்து கொள்கிறேன். மேலும் அந்தந்த சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட மாவட்ட, மாநகர, நகர, பகுதி, ஒன்றிய, பேரூர், வார்டு மற்றும் கிளைக் கழக நிர்வாகிகளும், செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்களும், சார்பு அணி நிர்வாகிகளும் மற்றும் இளைஞரணியைச் சேர்ந்த நிர்வாகிகளும் திரளாகக் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

*இவ்வாறு அமைச்சர் பி.கீதாஜீவன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.*

### கழகத் தலைவர்– முதலமைச்சர் மு. க.ஸ்டாலின் பிறந்தநாள் விழா!

# நல்லூரில் மாபெரும் இலவச மருத்துவ முகாம்!

### ஒன்றிய துணைச் செயலாளர் அன்புக்குமரன் தலைமையில்! டி. அண்ணாதுரை -மாரிமுத்தாள்-குணசேகரன் தொடங்கி வைத்தனர்!

*கடலூர், மார்ச் 9 -*

*கழகத் தலைவர், முதலமைச்சர் மு. க.ஸ்டாலின் அவர்களின் 72 வது பிறந்த நாளை முன்னிட்டு கடலூர் மேற்கு மாவட்டக் கழக செயலாளர், அமைச்சர் சி.வி. கணேசன் ஆலோசனைப்படி நல்லூர் வடக்கு ஒன்றியக் கழக துணை செயலாளர் அன்புகுமரன் தலைமையில் மாபெரும் இலவச பொது மருத்துவ முகாம் நடைபெற்றது.*

*மருத்துவ முகாமை நல்லூர் வடக்கு ஒன்றிய துணைச் செயலாளர்கள் பூலாம்பாடி டி. அண்ணாதுரை நாரையூர் மாரிமுத்தாள் குணசேகரன் தொடங்கி வைத்தார்கள்.*



கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72 வது பிறந்தநாளை முன்னிட்டு கடலூர் மேற்கு மாவட்டம் நல்லூரில் ஒன்றிய துணை செயலாளர் அன்புகுமரன் தலைமையில் மாபெரும் இலவச மருத்துவ முகாம் நடைபெற்றது. மருத்துவ முகாமை நல்லூர் வடக்கு ஒன்றிய துணை செயலாளர்கள் பூலாம்பாடி டி.அண்ணாதுரை, மாரிமுத்தாள் குணா தொடங்கி வைத்தார்கள். உடன் மஞ்சமுத்து சின்னசாமி ஆசிரியர் பெ.ஐயப்பன், பெருமாள், ரஞ்சித் குமார், சக்திவேல் உள்ளனர்.

*இதில், பாண்டிச்சேரி மகாத்மா காந்தி மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் மருத்துவக் குழுவினர் மகளிர் மருத்துவம், பொது மருத்துவம், பொது அறுவை சிகிச்சை, எலும்பு மூட்டு அறுவை சிகிச்சை, கண் மருத்துவம், குழந்தை நல மருத்துவம் உள்ளிட்ட பிரிவுகளின் கீழ் பொதுமக்களுக்கு சிகிச்சை அளித்தனர்.*

*மருத்துவ முகாமில் சாத்தியம் மஞ்சமுத்து, கொத்தனூர் சின்னசாமி ஆசிரியர், பெரியநெசலூர் பெ.ஐயப்பன் வண்ணாத்தூர் பெருமாள், நல்லூர் ரஞ்சித் குமார், ஒன்றிய மருத்துவர் அணி அமைப்பாளர் மெடிக்கல் சக்திவேல் உள்ளிட்டோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.*

*மேலும், இம்முகாமில் சேப்பாக்கம், நகர், நல்லூர், வண்ணாத்தூர், இலங்கியனூர், மேமாத்தூர், தருசு, கண்டப்பன்குறிச்சி, கொத்தனூர், என்.நாரையூர், திருப்பெயர், வேப்பூர், ஐவதக்குடி, ஆதியூர், காட்டுமைலூர், சித்தூர் உள்ளிட்ட கிராமங்களை சேர்ந்த சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பங்கேற்று சிகிச்சை பெற்று பயனடைந்தனர்.*

### செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில்

# ‘செந்தமிழ் நாட்டு தமிழச்சியே’ எனும் போட்டி!

## சமூக ஊடகங்கள் வாயிலாக நடத்தப்படுகிறது!

சென்னை, மார்ச் 9–

முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான நான்கு ஆண்டு கால ஆட்சியில் சமூக நீதி, சமத்துவம் மற்றும் பெண்களுக்கு அதிகாரம் அளித்தல் ஆகியவற்றை பல்வேறு நலத்திட்டங்கள் மூலம் வழங்கியதில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக திகழ்கிறது. அதன்படி தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வரும் பெண்களுக்கான திட்டங்களைப் போற்றும் வகையில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சமூக ஊடகமையம் சார்பில் “செந்தமிழ் நாட்டு தமிழச்சியே” என்ற தலைப்பில் பல்வேறு சமூக ஊடகங்களின் (X, Instagram, Facebook, WhatsApp, YouTube) வாயிலாக போட்டிகள் நடத்தப்படவுள்ளது.

இப்போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெறும் போட்டியாளர்களுக்கு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் அவர்கள் நேரில் சந்தித்து பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் பதக்கங்கள் வழங்கி சிறப்பிக்கவுள்ளார்.

முதலமைச்சர் அவர்கள், பெண்களுக்கான பல்வேறு மகத்தான நலத்திட்டங்கள் வாயிலாகத் தமிழ்நாட்டுப் பெண்களின் வாழ்க்கையில் மாபெரும் மாற்றத்தை ஏற்படுத்தி உள்ளார்கள்.

விடியல் பயணத் திட்டம் மூலம் அரசின் விடியல் பயண பேருந்துகளில் இதுவரை 642 கோடியே 55 இலட்சம் முறை மகளிர் கட்டணமில்லா விடியல் பயணம் மேற்கொண்டுள்ளனர். இதன் மூலம் ஒவ்வொரு பெண் பயணியும் மாதம் சராசரியாக ரூ.888 வரை சேமிக்கின்றனர்.

கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டம் மூலம் மாதந்தோறும் ரூ.1000/- வீதம் 1 கோடியே 15 லட்சம் மகளிர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் பெண்களின் வாழ்க்கையை வளம் மிக்கதாக மாற்றியமைத்துள்ளது.

புதுமைப் பெண் திட்டத்தில் 6-ஆம் வகுப்பு முதல் 12-ஆம் வகுப்பு வரை அரசுப் பள்ளி, அரசு உதவி பெறும் தமிழ் வழிப் பள்ளிகளில் பயின்று, தடையின்றி உயர் கல்வி பயிலும் 4 இலட்சத்து 97 ஆயிரத்து 525 மாணவிகளுக்கு மாதந்தோறும் ரூ. 1000/- வழங்கப்பட்டு வருகிறது.

இவ்வாறு கடந்த நான்கு ஆண்டு கால ஆட்சியில் செயல்படுத்தப்பட்டுள்ள பல்வேறு பெண்கள் நலத்திட்டங்களின் மூலமும், பெண்களைப் போற்றும் விதமாகவும் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சமூக ஊடகமையம் சார்பில் “செந்தமிழ் நாட்டு தமிழச்சியே” என்ற தலைப்பில் போட்டிகள் நடத்தப்படவுள்ளன. அதன்படி உங்கள் கருத்து மதிப்புமிக்கது (Your Voice Matters), Selfie with the Superwoman, ரீல்ஸ் போட்டி(Reels Competition), கட்டுரைப் போட்டி, வரைதல்/ஓவியப்போட்டி (Painting/Drawing Competition), ஆகிய 5 பிரிவுகளில் போட்டிகள் நடத்தபடவுள்ளது.

**போட்டிகளும் – அதன் விதிமுறைகளும் பின் வருமாறு:–**

**1. உங்கள் கருத்து மதிப்புமிக்கது** (Your Voice Matters)

உங்களைப் பெரிதும் கவர்ந்த பெண்களுக்கான திட்டம் எது?

உங்களது மதிப்புமிக்க கருத்துக்களைக் கீழ்க்காணும் link அல்லது க்யூ.ஆர். கோடினை பயன்படுத்தி தெரிவிக்கவும்.

https://docs.google.com/forms/d/e/1FAIpQLSc8HFOsug-pYz8bL5D83v98PuCxahXTfNmk9pRnhgFZ-2YPAQ/viewform?usp=sharing

**2. சுயமிப் போட்டி** (Selfie with the Superwoman)

போட்டியாளர்கள் தங்கள் வாழ்க்கையில் மிகுந்த ஊக்கம் மற்றும் தாக்கத்தை ஏற்படுத்திய பெண்கள் என்பதை விளக்கும் வகையில் ஒரு வாசகத்துடன் கூடிய சுயமி - யை(Selfie) தங்களின் சமூக ஊடகக் கணக்குகளிலிருந்து #செந்தமிழ்நாட்டுதமிழச்சியே #TNCelebratesHer மற்றும் #TNWomen என்ற ஹாஷ்டாக்குகளை பயன்படுத்தி @tndipr-யை TAG செய்து பகிரவும்.

**3. ரீல்ஸ் போட்டி** (Reels Competition)

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்ட “செந்தமிழ் நாட்டு தமிழச்சியே” பாடலுக்கான தங்களின் ஹூக் ஸ்டெப்பை (Hook Step) உருவாக்கி, தங்களது சமூக ஊடகக் கணக்குகளிலிருந்து #செந்தமிழ்நாட்டுதமிழச்சியே #TNCelebratesHer மற்றும் #TN Women என்ற ஹாஷ்டாக்குகளை பயன்படுத்தி @tndipr-யை TAG செய்து பகிரவும். ரீல்ஸ் 1 நிமிடத்துக்குள் அமைய வேண்டும்.

வீடியோ மற்றும் ஆடியோ சரியான தரத்துடன் இருக்க வேண்டும்.

செந்தமிழ் நாட்டு தமிழச்சி Link: https://www.youtube.com/watch?v=IfAPSkdp4GM

**4. கட்டுரைப் போட்டி** (Essay Competition)

1. மகளிர் மேம்பாட்டில் மற்ற மாநிலங்களை விட தமிழ்நாடு ஏன் முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது?

2. கடந்த 4 ஆண்டுகளில் வெளியிடப்பட்ட பெண்கள் நலத் திட்டங்கள் மற்றும் முன்முயற்சிகள் பற்றி

3. கடந்த 4 ஆண்டுகளில் பெண்கள் நலத் திட்டங்கள் மூலம் பயனடைந்தவர்கள் - அவர்களின் வாழ்க்கை அல்லது அன்றாட வாழ்வாதாரத்தில் எவ்வாறு மாற்றம் அடைத்திருக்கிறீர்கள் என்பதைப் பற்றி மூன்று தலைப்புகளில் ஏதாவது ஒன்றில் 3 பக்க அளவில் கட்டுரைகள் அமைதல் வேண்டும்.

கட்டுரைகளைத் எழுதி PDF கோப்பாக அனுப்ப வேண்டும்.

**5. வரைதல் / ஓவியப் போட்டி** (Painting/Drawing Competition)

**தலைப்பு : பெண்களை போற்றுவோம்**

பெண்களைக் கௌரவித்து கொண்டாடும் வகையில் வரைதல்/ஓவியங்கள் அமைதல் வேண்டும்.

ஓவியங்களைத் தெளிவான முறையில் புகைப்படம் எடுத்து அனுப்ப வேண்டும்.

மேற்கண்டவாறு நடத்தப்படும் போட்டிகளில் பங்கேற்கும் போட்டியாளர்கள் தங்கள் படைப்புகளைக் கீழ்க்கண்ட க்யூ. ஆர். கோடினை பயன்படுத்தி அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேலும் tndiprmhiwd2025@gmail.com என்ற மின்னஞ்சலிலும் அனுப்பி வைக்கலாம் என்பதையும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

இவ்வாறு அவ்வறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### பெங்களூரில் ‘ஹஜ் பவன்’ கட்டப்படும் எனும் அறிவிப்பு!

# தமிழ்நாடு முதலமைச்சரைப் பின்பற்றும் கர்நாடக முதல்வர்!

## இந்திய ‘ஹஜ்’ அசோசியேஷன் தலைவர் பிரசிடெண்ட் அபூபக்கர் பெருமிதம்!

*புதுடெல்லி, மார்ச் 9-*

*இந்திய ‘ஹஜ்’ அசோசியேஷன் தலைவர் பிரசிடெண்ட் அபூபக்கர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-*

*தமிழ்நாட்டில் சிறுபான்மை மக்களுக்கு அரணாக தமிழ்நாடு முதலமைச்சர் எத்தகைய திட்டங்களை தீட்டி வருகிறாரோ அதை அப்படியே செயல்படுத்தி இருக்கிறார் கர்நாடக முதலமைச்சர் சித்தராமையா. அந்த வகையில் பார்க்கிறபோது;*



*இன்று தாக்கல் செய்யப்பட்ட பட்ஜெட்டில் கர்நாடக மாநிலம், பெங்களூரில் ஹஜ் பவன் கட்டப்படும் என்ற அறிவிப்பு வரவேற்கத்தக்கது.*

*வக்ஃபு வாரியத்திற்கு சொந்தமான காலியான இடங்களில்; 15 அரசு பெண்கள் கல்லூரிகள் தொடங்குவதற்கும் அனுமதி வழங்கப்பட்டிருப்பது மகிழ்ச்சியளிக்கிறது. அது மட்டும் அல்லாமல் உலமாக்களுக்கு வழங்கப்படும் மாத ஊதியம் 6ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்பட்டிருப்பது வரவேற்கத் தக்க விஷயமாக பார்க்கப்படுகிறது.*

*தமிழ்நாடு முதலமைச்சர் சிறுபான்மையினர் நலன் காப்பதில் முதல்வர்களின் முதல்வராக இருக்கிறார்.*

*சிறுபான்மையின மக்களில் ஒருவராக நின்று திட்டங்கள் தீண்டும் முதலமைச்சர் ஸ்டாலின் அவர்கள் வழியை காங்கிரஸ் கூட்டணியில் திமுகவோடு அங்கம் வகிக்கிறோம் என்ற தோழமை உணர்வோடு பயணிக்கும் கர்நாடக முதல் அமைச்சரும் பின்பற்றுவது மகிழ்ச்சியும், நெகிழ்ச்சியும் ஏற்படுத்துகிறது.*

*இரண்டு முதலமைச்சர்களும் ஒரே வழியில் பயணிப்பது நாகரிகமான தொடக்கமாக மாறியிருப்பது நல்லதோர் தொடக்கம்.*

*இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.*

# வேலூர் - சென்னங்குப்பத்தில் முதல்வர் பிறந்தநாள் தெருமுனைக் கூட்டம்!

## ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. – தூத்துக்குடி சரத்பாலா – செல்வி ஆர்த்தி சிறப்புரை!

*வேலூர், மார்ச் 9 -*

*7.3.2025 அன்று வேலூர் மாவட்டம் கே.வி.குப்பம் மேற்கு ஒன்றியம் சென்னங்குப்பம் ஊராட்சியில் முதல்வர், தலைவர் தளபதி அவர்களின் 72வது பிறந்தநாள் விழா முன்னிட்டு தெருமுனை பிரச்சாரக் கூட்டம் நடைபெற்றது.*

*கூட்டத்திற்கு கே.வி.குப்பம் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் கே. சீதாராமன் தலைமை தாங்கிட, எம் அசோக்குமார், விடி ஜெயக்குமார், கட்டுக்கல் பாஸ்கர், கோ.இளங்கோ, சி. மார்கபந்து, பா.சிவகாமி, புண்ணியகோட்டி, புஜங்கராவ், பாலகிருஷ்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.*

*எம். வெங்கடேன், பணிமனை சி.மதியழகன், பந்தல் வடிவேல், ஆகியோர் வரவேற்புரை ஆற்றினார்கள்.*

*வேலூர் மாவட்ட கழக செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. துவக்கி சிறப்புரை ஆற்றினார். தலைமை கழக பேச்சாளர்களான, தூத்துகுடி சரத்பாலா, செல்வி ஆர்த்தி ஆகியோர் உரை நிகிழ்த்தினார்கள்.*

*கூட்ட ஏற்பாட்டை கே.வி.குப்பம் மேற்கு ஒன்றிய தி.மு.கழகம் செய்திருந்தது.*

*ஏ.வில்வநாதன் நன்றி கூறினார்.*


தமிழ்நாடு அரசு

**மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககம்**

**தமிழ்நாடு மருத்துவ நிறுவனங்கள் (முறைப்படுத்துதல்) சட்டம் 1997, சட்ட எண். 19, 2018**

- தமிழ்நாடு அரசின் அனுமதி பெற்ற அனைத்து மருத்துவமனைகள் / நோயறிதல் மையங்கள் (Clinics) போன்றவை தமிழ்நாடு மருத்துவ நிறுவனங்கள் சட்டம் 1997–ன் கீழ் பதிவு செய்யப்பட வேண்டும்.
- அரசு மற்றும் தனியார் மருத்துவ நிறுவனங்கள் இரண்டும் பதிவு செய்யப்பட வேண்டும். ஆயுத படைகளுக்கு சொந்தமான மற்றும் இயக்கப்படும் நிறுவனங்களுக்கு மட்டும் விலக்கு அளிக்கப்படுகிறது.
- கீழ்காணும் ஆன்லைன் மூலம் மட்டுமே பதியப்பட வேண்டும். **www.tncea.dmrhs.tn.gov.in**
- பதிவு செய்யப்படாத மருத்துவ நிறுவனங்கள் மீது தமிழ்நாடு மருத்துவ நிறுவனங்கள் (முறைப்படுத்துதல்) சட்டம் – 1997–ன் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும்.
- போலி மருத்துவர்கள் தொடர்பாக புகார் அளிக்க **tncea.dmrhs@gmail.com** என்ற இணையதளம் மற்றும் 104 இலவச தொலைபேசி எண்ணில் புகார் தெரிவிக்கலாம்.
- W.P. (MD) NO. 20217 of 2019, நாள். 15.02.2020, W.P (MD) No. 14520/2023, நாள். 03.10.2024 நீதிமன்ற ஆணையின் படி, மருத்துவ படிப்பிற்கு கல்வி நிறுவனங்கள் முறையாக தமிழக அரசின் அனுமதி பெற்று தமிழ்நாடு அரசால் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவம் மற்றும் மருத்துவம் சாரா கல்வியினை பயில்விக்குமாறு கேட்டு கொள்ளப்படுகிறது.
- எனவே மாணவரின் பெற்றோர்களும் தமிழ்நாடு அரசு அங்கீகாரம் பெறாத மருத்துவம் மற்றும் மருத்துவம் சாரா கல்வியினை பயில்விக்க வேண்டாம் என எச்சரிக்கப்படுகிறார்கள்.
- இத்தகைய கல்விகளுக்கு வேலை வாய்ப்பு அளிக்க இயலாது என தெரிவித்து கொள்ளப்படுகிறது.

**மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககம்,**
**சென்னை - 600 006.**

செ.ம.தொ.இ./234/வரைகலை/2025